**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.15/2025**

IN

**அசல் வழக்கு எண்.237/2014**

1. கோட்டைச்சாமி
2. முத்துக்குமார்
3. கிருஷ்ணசாமி ...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. பரமு அம்மாள் (இறந்தவர்)
2. சுவாமிநாதன்
3. கோமதிநாயகம் பாண்டியன்
4. முத்துக்குமார்
5. ராமையா (இறந்தவர்)
6. செண்பகராஜன் ...எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனுவானது 04.11.2025 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், 1, 5 எதிர்மனுதாரர்கள் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 2 முதல் 4, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு கோப்பு, இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:48:28 +0530

கட்டளை 8 விதி 9–ன் கீழ், இம்மனுவுடன் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்றுக்கொள்ள கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் மனுதாரர்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இவ்வழக்கில் மனுதாரர்கள் ஏற்கனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், 3ம் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் 3ம் பிரதிவாதியை பி.வா.சா.1 ஆக 09.02.2023ல் முதல்நிலை விசாரணை செய்யப்பட்டது என்றும், அதன் பின்னீட்டு வாதிகளால் நீதிமன்றத்தில் பல வாய்தாக்கள் பெறப்பட்டு அதன்பின்னர் காலம் கடந்த பதில் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி பதில் எதிர்வழக்குரையை மறுத்து மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே மனுதாரர்களது கட்சியை விபரமாக கூறி எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாத தவறுதலும் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும் என்றும், ஆகையால், இம்மனுவுடன் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்றுக்கொள்ள கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **3ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2, 4, 6 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், இவ்வழக்கில் வ.வி.எண்.15/2025

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:48:35 +0530

அவிட்டின் 2வது பாராவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையில்ல என்றும், மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதை ரிசிவ் செய்து கொள்ளக்கூறும் காரணம் பொய்யானது என்றும், மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரையில் கூறியுள்ள விசயங்கள் அனைத்தும் சட்டத்திற்கு பொருந்தாவைகளாகும் என்றும், எனவே மனுதாரர்களின் கூடுதல் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை என்றும், ஆகையால், மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவுடன் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்றுக்கொள்ள கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) மேலும், இம்மனுவானது அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவடைந்து, தற்பொழுது பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.11.11 17:48:44 +0530

8) மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் இவ்வழக்கில் மனுதாரர்கள் ஏற்கனவே எதிர்வழக்குரை தாக்கல் வாதிகளால் நீதிமன்றத்தில் பல வாய்தாக்கள் பெறப்பட்டு அதன்பின்னர் காலம் கடந்த பதில் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி பதில் எதிர்வழக்குரையை மறுத்து மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவேண்டியது அவசியமாய் இருக்கிறது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) இம்மனுவின் 2 முதல் 4, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரையில் கூறியுள்ள விசயங்கள் அனைத்தும் சட்டத்திற்கு பொருந்தாவைகளாகும் என்றும், எனவே மனுதாரர்களின் கூடுதல் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, வாதிகள் தரப்பில் பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.6/2024 மனுவானது இந்நீதிமன்றத்தால் 18.09.2025 அன்று அனுமதிக்கப்பட்டு வாதிகள் தரப்பு பதில் எதிர்வழக்குரை இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

11) அசல் வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள மேற்கண்ட பதில் எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை மறுத்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

12) மேலும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்வதால் அசல் வழக்கின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கும், தரப்பினர்களுக்கு இடையே மேலும் பல வழக்குகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், மனுதாரர்கள் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:48:52 +0530

13) இருப்பினும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களது தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை மிகவும் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதால் 2 முதல் 4, 6 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில் கொண்டு இம்மனுவானது நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**<u>14) இறுதியாக</u>**

இம்மனுவானது ரூ.200/- (ரூபாய் இருநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 2 முதல் 4 மற்றும் 6 வது எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 13.11.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 13.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:48:59 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

- இல்லை -

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:49:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.15/2025
in
O.S.No.237/2014
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 11.11.2025**